# சினம் தவிர்ப்போம்

நாம் ஒருவர் மீது வெளிப்படுத்தும் அன்பற்ற சொற்கள் அல்லது செயல்களே கோபம் (சினம்) ஆகும். அவ்வாறு வெளிப்படுத்தும் கோபம் மற்றவர்களுக்கு மட்டும் அல்லாமால் நமக்கும் பல தீமைகளை விளைவிக்கக்கூடியது. நமது மகிழ்ச்சி, உடல் ஆரோக்கியம், அமைதி, ஒற்றுமை போன்றவற்றை அழிக்கும் ஆபத்தான ஆயுதம் சினம். சினத்தைத் தவிர்த்துப் பொறுமையுடன் வாழ்வதே உடலுக்கும் மனதுக்கும் நன்மை விளைவிக்கும்.



"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"



அன்பின் அடிப்படையில் நல்லொழுக்கம் உடையவர்களின் நட்பே நல்ல நட்பு ஆகும். ஒரு நல்ல நட்பானது எப்படி இருக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் பல்வேறு உவமைகளைக் கொண்டு விளக்குகிறார்.



www.worldtamilacademy.com

“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு”

என்னும் குறளில் முகம் மட்டும் மலரும்படி நட்பு கொள்வது நட்பன்று. உள்ளம் மகிழும்படி நட்பு கொள்வதே நட்பாகும் என்கிறார். மேலும், சிரித்துப் பேசி மகிழ்வதுடன், நண்பர்கள் தவறு செய்தால் எடுத்துக் கூறி திருத்துவதும் நட்பாகும் என்பதை வள்ளுவர்,





“முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்”

என்னும் குறளில், முயற்சியுடன் கூடிய கடின உழைப்பு வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துச் செல்வங்களையும் தரும். ஆனால், முயற்சி இன்மையோ வறுமையைத் தரும் என்கிறார் வள்ளுவர். நாம் ஒரு செயலைச் செய்யும் பொழுது எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும் சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் முயற்சியுடன் தொடர்ந்து செய்ய வேண்டும்.